# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 162/மா/2025
நாள் 04 .03.2026

V. கிருபானந்தன் மற்றும் B. விஜயகுமார்,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

சென்னை–600 005, திருவல்லிக்கேணி, அயோத்தியா நகர், கதவு எண் 20/439 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.கிருபானந்தன் மற்றும் சென்னை–600 081, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண் 14/15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் ஆகியோரின் 14.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2025 அன்று பெறப்பட்டு 162/மா/2025 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 005, திருவல்லிக்கேணி, அயோத்தியா நகர், கதவு எண் 20/439 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.கிருபானந்தன் மற்றும் சென்னை–600 081, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண் 14/15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் ஆகியோர் 14.04.2025 நாளிட்ட தங்களது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளனர்:–

"1. பொதுவாக சென்னை என்பது பரப்பளவில் மிக சிறியதான ஒரு பகுதியாக உள்ளது. சுமார் 1990ம் ஆண்டுகளில் சென்னையில் உள்ள அனைத்து தெருக்களிலும், சாலைகளிலும் தண்ணீர் லாரிகள் மிகவும் சர்வ சாதாரணமாக வந்து செல்லும் காலம் அது. ஆனால் தற்போதோ நிலைமையே வேறு. அரசாங்க அறிவுறுத்தல்களை மீறி கட்டப்படும் விதிமீறல் கட்டிடங்களை பற்றி கண்டுக்கொள்ளாத மாநகராட்சியில் உள்ள சில அதிகாரிகளாலும் இன்றைக்கு ஒவ்வொரு சாலைகளிலும் அவசர உதவி ஆம்புலன்ஸ் அல்லது ஆட்டோ சென்று வரவே மிகவும் சிரமமாக உள்ளது. ஒரு சில நபர்கள் தன்னுடைய சுயநலத்திற்காக பல்லாயிரம் மக்கள் கஷ்டப்படும் சூழல் நிகழ்ந்து கொண்டு தான் வருகிறது. ஒரு நபரின் லாபம், 100 நபருக்கு அது இடையூறாக உள்ளது.

2. ஆகவே சமூக ஆர்வலர்களாகிய நாங்கள் கடந்த 5 ஆண்டுகளாக சென்னை மாவட்டங்களில் பல பகுதியில் பலவிதிமீறல் கட்டிடங்கள் தொடர்பாக பல ஆய்வு நடத்தி வருகிறோம். மேலும் விதிமீறல் கட்டிடம் தொடர்பாக பொதுமக்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் என்ன இழப்புகள் ஆகியுள்ளது என்பதனை கண்காணித்து அதை பொதுமக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். மேலும் அதிகாரிகளிடம் விதிமீறல் கட்டிடம் தொடர்பாக எடுத்துரைத்து வருகிறோம்.

3. அதில் ஒரு உதாரணமாக சென்னை–2, சேப்பாக்கம், அண்ணாசாலை, விஜயநாராயணதாஸ் சாலை, கதவு எண் 22/43 ஆர். எஸ்.எண் 375/118, திருவல்லிகேணி கிராமத்தின், பிளாக் எண் 13 சென்னை பெருநகர மாநகராட்சி பிரிவு–063, மண்டலம் 05–த்திற்கு உட்பட்ட இடத்தில் G+2 கட்டுவதற்கு அனுமதி பெற்று G+4 கட்டிடமாக கட்டியுள்ளார். இது சம்பந்தமாக கடந்த 15.06.2023 அன்று மண்டலம்–5, மண்டல அலுவலரிடம் மனு அளித்திருந்தேன். ஆனால் மண்டல அதிகாரிகளும், வார்டில் பணிபுரியும் உதவி பொறியாளர்களும் கட்டிட உரிமையாளரிடம் ரகசியமாக ஒப்பந்தம் வைத்து கொண்டு அனுமதி பெற்றதற்கு மாறாக கட்டிடம் கட்டியுள்ளதை ஆதரித்து வருகிறார்கள். இது சம்பந்தமாக பலமுறை அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் என்று அனைவருக்கும் மனு நேரில் அளித்தும் இன்று வரையிலும் எந்த பயனும் இல்லை. இதுபோல் பலர் உண்மையான திட்ட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டி வரும் கலாச்சாரம் பெருகி வருகிறது.

4. ஆனால் இதுநாள் வரை அந்த கட்டிடத்தின் மீதோ அல்லது அந்த கட்டிட உரிமையாளர் மீதோ எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் மண்டலம்–5 அதிகாரிகள் காலம் தாழ்த்தி வருகிறார்கள். ஆனால் அதிகாரிகள் கட்டிட உரிமையாளரிடம் ரகசியமாக கூட்டு ஒப்பந்தம் பேசிக் கொண்டு இதனால் வரை நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள்.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி நடுவன் அமைப்பு இந்த மனுவினை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரியை உரிய விசாரணை மேற்கொண்டு எனக்கு உத்திரவு பிறப்பித்து வழங்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இருப்பினும், இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 05.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. ஆனால் நிர்வாக காரணத்தை முன்னிட்டு மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர்களில் திரு. கிருபானந்தன் என்பவர் 09.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் சென்னை–2 சேப்பாக்கம், அண்ணாசாலை, விஜயநாராயணதாஸ் சாலை, கதவு எண் 22/43 ஆர். எஸ்.எண் 375/118, திருவல்லிகேணி கிராமத்தின், பிளாக் எண் 13 என்ற இடத்தில் G+2 கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்று ஜி+4 கட்டிடமாக கட்டியுள்ளார். மேலும் கட்டிடத்திற்கான பார்க்கிங் மற்றும் கட்டிடத்தை சுற்றி விதிப்படி இடைவெளி இடம் விடப்படவில்லை. இது சம்பந்தமாக கடந்த 15.6.2023 அன்று மண்டலம்–5 மண்டல அலுவலரிடம் மனு அளித்திருந்தேன், ஆனால் மண்டல அதிகாரிகள் கட்டிட உரிமையாளருக்கு சாதகமாகவும், ஆதரவாகவும் செயல்பட்டு வருகிறார்கள். இதுவரை மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்திற்கு எவ்வித தாக்கீதும் அமலாக்க நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை.
>
> இதுகுறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியும், தகவல்கள் அளிக்க மறுத்து விட்டார்கள்.
>
> எனவே, விதி மீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடம் தொடர்பாக உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுத்து, பூட்டி மற்றும் சீல் வைக்க உரிய தாக்கீது வழங்கவும், நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும், பெருநகர

சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.''

5. மற்றொரு மனுதாரர் திரு. B. விஜயகுமார் என்பவர் 09.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளர் 09.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டதில், கட்டிட உரிமையாளர் G+3 அனுமதி பெற்று, அனுமதிக்கு மாறாக மனுதாரர் குறிப்பிட்டவாறு நான்காவது மாடி கட்டியுள்ளார்.

மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 15.06.2022 நாளிட்ட தாக்கீது தமிழ்நாடு நகர்ப்புற ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன்கீழ் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

மேலும், மேற்கண்ட கட்டிடத்திற்கு உரிய தொடர் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரர்களின் மனு, மனுதாரர்களில் திரு. V. கிருபானந்தன் என்பவரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

''பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன், சென்னை–2, சேப்பாக்கம், அண்ணாசாலை, விஜயநாராயணதாஸ் சாலை, கதவு எண் 22/43 ஆர். எஸ்.எண் 375/118, திருவல்லிகேணி கிராமத்தின், பிளாக் எண் 13 என்ற இடத்தில் G+2 கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்று, G+4 கட்டிடம் மற்றும் அக்கட்டிடத்திற்கான பார்க்கிங் மற்றும் அதனைச் சுற்றி விதிப்படி இடைவெளி விடாமலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், இவ்விதிமீறல் கட்டிடத்தின் மீது மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், இது குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், தகவல்கள் கோரியும், தங்களுக்கு தகவல்கள் அளிக்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்திற்கு சட்டப்படியான பெருநகர சென்னை மாநகராட்சியால் எவ்வித தாக்கீதுகள் வழங்கப்படவில்லை என்பதும், சட்ட விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடத்தின் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரர்களின் மனு மற்றும் மனுதாரர்களில் திரு.V.கிருபானந்தன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட சென்னை–2 சேப்பாக்கம், அண்ணாசாலை, விஜயநாராயணதாஸ் சாலை, கதவு எண் 22/43 ஆர். எஸ்.எண் 375/118, திருவல்லிகேணி கிராமத்தின், பிளாக் எண் 13 என்ற இடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தில் கள ஆய்வு செய்யப்பட்டதில், கட்டிட உரிமையாளர் G+3 அனுமதி பெற்று, அனுமதிக்கு மாறாக மனுதாரர் குறிப்பிட்டவாறு நான்காவது மாடி விதிமீறி கட்டியுள்ளதால், தமிழ்நாடு நகர்ப்புற ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன்கீழ் தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடத்திற்கு உரிய தொடர் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் அனுமதிக்கு மாறாக நான்காவது மாடி, விதிமீறி கட்டிட உரிமையாளர் கட்டியுள்ளதால், தமிழ்நாடு நகர் மற்றும்

ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன்கீழ் தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இருப்பினும் மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 15.06.2022–இல் தாக்கீது வழங்கப்பட்டிருந்த போதிலும் இதுநாள் வரை தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என தெரிய வருகிறது. எனவே காலதாமதத்திற்கு காரணமான அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், விதிமீறி ,கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன்படியும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படியும், மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற வழிகாட்டுதல் படியும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. V.கிருபானந்தன்,
கதவு எண் 20/439, அயோத்தியா நகர்,
திருவல்லிக்கேணி, சென்னை–600 005.

(2) திரு. B. விஜயகுமார்,
கதவு எண் 14/15,
சால்ட் குறுக்குத் தெரு, துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை–600 081.

(3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

(4) மண்டல அலுவலர், மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்62, பேசின் பாலம் சாலை,
சென்னை 600 021.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

6/3/26
செயலாளர்.
6326